**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 3/2020**

Deposition of witness for பி.வா.சா. 1

Name and Age :

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion

:

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (06.11.2025)

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்தானது இராமு அம்மாளுக்கு அரசாங்கத்திலிருந்து இலவசமாக கொடுத்தது என்றால் சரிதான். ராமு அம்மாளுக்கு திருமணம் ஆகவில்லை, அதனால் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். ராமு அம்மாள் வாதியின் தகப்பனார் வேலாயுதத்தில் பராமரிப்பில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ராமு அம்மாள் ஒரு ஓடு போட்ட வீடு கட்டி வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு கதவு எண் தெரியுமா என்றால் 2.7.2 (இரண்டு ஏழு இரண்டு) ஆகும். ராமு அம்மாள் வாரிசு இல்லாமல் இறந்து போனதால் அந்த சொத்து இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதியின் தகப்பனார் வேலாயுதத்திற்கு கிடைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வேலாயுதம் எங்களுக்கு விற்றுவிட்டார். வேலாயுதம் சொத்தினை அனுபவித்து வந்து அவரது பையனுக்கு 07.12.2011 தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை. எங்களுக்கு தான் கிரையம் கொடுத்துள்ளார். எனது வீட்டுக்காரர் பெயர் சௌந்தரபாண்டியன் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி மாரியம்மாள் என்பது எனது கணவர். இரண்டாவது மனைவியாவார். மூன்றாம் பிரதிவாதி அப்பா குட்டி எனது தகப்பனார். சௌந்தர பாண்டியனுக்கும், எனக்கும் எந்த காலத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 50 வருடம் இருக்கும். எனது நிரூபண உறுதி கூற்றில் வயது 45 என சொல்லி உள்ளேன். நான் திருமணம் ஆகி 50 வருடம் இருக்கும் என்று சொல்லி உள்ளது உண்மை இல்லை என்றால் சரியில்லை.

எனது கணவர் சௌந்தர பாண்டியனின் தகப்பனார் பெயர் வேலாயுத பாண்டியன் என்றால் சரிதான். வாதியின் தந்தையார் வேலாயுதம் மற்றும் எனது கணவரின் மாமனாரும்

கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லி உள்ளதில், அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இராமு அம்மாள், வாதியின் தந்தையார் வேலாயுத பாண்டியனுக்கு பிறகு சொத்தை விற்பனை செய்வதற்கு அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை. நான் உறுதி கூற்றில் 31.01.1990 ஆம் தேதியில் அதிகார ஆவணம் கொடுத்துள்ளதாக சொல்லி இருப்பது பொய் என்றால் சரியல்ல. அரசாங்கம் 1986 ஆம் வருடம் சொத்தினை கொடுத்திருப்பதால் நாலு வருடத்தில் ராமு அம்மாள் அதிகார ஆவணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதியின் அப்பா வேலாயுத பாண்டியன் வேலாயுதத்திடம் ஒப்பந்தம் போட்டதாக சொல்லி உள்ளதில் அது எந்த வருடம் என்றால் தெரியாது. எனது மாமனாருக்கு தான் தெரியும். அதைப்பற்றி எதுவும் தெரியாததால் எவ்வளவு தொகை பேசி எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் முன் பணமாக ரூ.5,000/- மற்றும் ரூ.17,500/- கொடுத்து மொத்தம் ரூ.22,500/- ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பணத்தை ராமு அம்மாளிடம் எனது மாமனார் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாப்பிள்ளையும், எனது மாமனாரும் கொடுத்தார்கள். ஒப்பந்தம் போட்டது, அதற்கு பணம் கொடுத்தது எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மாமாவுக்கு தான் தெரியும். ஒப்பந்தம் போட்டு, அது சம்பந்தமாக முன்பணம் கொடுத்தது சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.17,500/- கிரையத்தொகை கொடுப்பது 15.02.1998 தேதியில் கொடுக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1998 இல் இருந்து எனது மாமனார் வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததைகாட்டக்கூடிய ஆதரவையோ, எனது கணவர் வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததை காட்டக்கூடிய ஆதரவையோ நான் தற்போது உரிமையாளர் நிலையில் அனுபவம் செய்து வருவதற்கு காட்டக்கூடிய ஆதரவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வீடு வாங்கியதில் இருந்து நான் தான் அனுபவித்து வருகிறேன். எனது மாமனார் வேலாயுத பாண்டியன் எந்த தேதியில் இறந்தார் என்றால் தெரியாது. இறந்து 24 வருடம் ஆகிவிட்டது. எனது மாமனார் குடும்பத்திற்குள் அவர் இறந்தபின் எந்த காலகட்டத்தில் மாமனாரின் சொத்துக்களை பாகம் பிரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது மாமனார் உயிருடன் இருக்கும் பொழுதே வடக்கே தெற்கே என்று பிரித்துக் கொடுத்துவிட்டார். அதில் தான் குடியிருந்து வருகிறோம். எனது மாமனார் உயிருடன் இருக்கும் பொழுதே வழக்கு சொத்தை வடக்கே தெற்கே என்று பிரித்ததால் எனது மாமனாரின் வாரிசுகள் பொதுவாக அனுபவம் செய்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு

சொத்தில் ஒரு ரூம் போட்ட வீடு தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் அந்த வீட்டில் எனது மாமனார் குடும்பத்தினர் அனைவரும் தங்க முடியாது என்றால் சரியல்ல. எல்லாரும் அங்க தான் இருந்தோம். எனது மாமனார் உயிருடன் இருக்கும் போதே பிரித்துக் கொண்டதால் எனது கணவர் உயிருடன் இருக்கும் பொழுது அவர்களுக்கும் எதுவும் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். நானும், எனது வீட்டுக்காரர் இந்த சொத்தை ஏதாவது ஒரு வகையில் மேம்படுத்தி உள்ளோம் என்பதற்கு எந்தவித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது. வாதி தகப்பனார் உயிருடன் இருக்கும் போது எனது தகப்பனார் அந்த சொத்தை விலை கிரையம் கேட்டார். அதனால் தொந்தரவு செய்ததால் வாதி இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.49/2013 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு இந்த பக்கம் திரும்பி விட்டது. அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது 01.04.2013 ஆம் தேதி அந்த சொத்தினை வன்நுழைவு செய்து அனுபவத்தில் எடுத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் அந்த வழக்கில் ஆளுகை மீட்பு பரிகாரம் கேட்காமல் நடத்தியதால்தான் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் அந்த சொத்தில் அத்து மீறி நுழைந்து இருப்பதால் வாதிக்கு திரும்ப கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள கிரைய ஒப்பந்தமும், கிரையமும் நடைபெறாததால் தான் அந்த சொத்தில் நில ஒப்படைப்பு ஆவணம் எங்களிடம் இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தில் அசல் நில ஒப்படைப்பு ஆவணம் வாதியிடம் இருந்ததால்தான் அவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது மாமனாரோ, எனது கணவரோ கிரயம் வாங்கவில்லை என்பதால் தான், இன்றையவரை அந்த கிரைய ஆவணத்தை பதிவு செய்வதற்கோ, அசல் ஆவணங்களை வாதி வகையறாவிடமிருந்து வாங்குவதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் காலகட்டத்தில் நில ஒப்படைப்பு கொடுத்து 30 வருட காலத்திற்கு அந்த சொத்தினை எந்த வில்லங்கம் செய்வதற்கு வாதியில் பாட்டிக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல பாதி கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரி என்ன கிரைய ஆவணத்தை

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.11.06 16:54:38 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai